**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 10.02.2026**
**OS. No. 180/2022**
**வழக்கு சாட்சி PW.2–ராஜாம்பு, த/பெ. சின்னப்பகவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. வாதி பழனிசாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். வாதி பழனிசாமி என் பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். வாதி பழனிசாமி அரசுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி தாவா சொத்தில் சுமார் 20 ஆண்டுகாலமாக அனுபவத்தில் இருந்து வருகிறார். தாவா சொத்தில் வாதி வீடு கட்டி, குடும்பத்துடன் இருப்பதாக தவறாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் தனிப்பட்ட பட்டா நிலம் என்றால் அரசு அதிகாரிகள் எந்த தொந்தரவும் செய்திருக்கமாட்டார்கள் என்றும், அரசாங்க நிலத்தில் வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதை அகற்ற தான் பிரதிவாதிகள் சட்டரீதியாக முயன்றார்கள் என்றால் சரியல்ல.

2) அரசு அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள் என்றும், சட்டத்திற்குட்பட்டுதான் நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான தரிசு வகைபாடு கொண்ட நிலத்தை அனுபவம் செய்வதாக வாதி சொல்வதே சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. தரிசு வகைபாடு கொண்ட நிலமானது, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேவைப்படும்பட்சத்தில் அரசு உரிய விதிமுறைகளை பின்பற்றி அதை மக்களுக்கு பயன் படுத்துவதற்கு எடுத்துக்கொள்வார்கள் என்றும், அதனால் வாதி அந்த சொத்தை பொறுத்து எந்த பரிகாரமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. தனிப்பட்ட நபர்களுக்கு நிலம் வழங்க அரசு எந்த செயல்திட்டமும் வகுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய்யாகவும், முன்னுக்கு பின் முரணாகவும் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம்

ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், வாதி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.